# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, செரண்டிப் கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---


*2009, ஒற்றோபர் மாதம் 02 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2009 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, செரண்டிப் கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[*2009 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ. ஓ. (கூட்) 25/2005*

### செரண்டிப் கல்விசார் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

*"செரண்டிப் கல்விசார் மன்றம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்தின் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றும் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ள தாதலாலும் :*

*அத்துடன் சொல்லப்பட்ட மன்றம், அது எக்குறிக்கோள்களுக் காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டுநடாத்தியுள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக இருக்குமாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தி னால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, செரண்டிப் கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*செரண்டிப் கல்விசார் மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனவழைக்கப்படும்) செரண்டிப் கல்விசார் மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தில் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்க ளுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "செரண்டிப் கல்விசார் மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்

2-PL 003911 -1,015 (2009/05)

கீழும் இடையறாவழியுரிமையுடனான கூட்டுத்தாபனமொன்றாக விருத்தலும் வேண்டுமென்பதுடன், அப்பெயரைக் கொண்டு அது வழக்குத்தொடுக்கலாம் ; அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத் தத்துவத்தையும் அதிகாரத்தையும் அது கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத் தப்படுகின்றது :-

(அ) இலங்கை முஸ்லிம்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தின் நிதிகளை பயன் படுத்தலும் பிரயோகித்தலும் மற்றும் தொழில் வழிகாட்டிநெறிகளை ஏற்பாடு செய்தலும் கல்விசார், தொழிநுட்ப மற்றும் உயர்தொழில் திறமைகள் அத்துடன் பொருளாதார சேமநலனை உயர்த்துதலும் ;

(ஆ) தொழிநுட்பக் கல்வி உட்பட கல்வி அபிவிருத்தியில் வழிகாட்டுதலும் உதவுதலும் ; அத்துடன்

(இ) இலங்கை முஸ்லிம்களின் சமூக மற்றும் கலாசார சேம நலனின் முன்னேற்றத்திற்கு உதவுதலும் அதனை மேம்படுத்துதலும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவங் களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) காசாக அல்லது பொருளாக மானியக் கொடைகள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் கட்டுப்பணங் களைப் பெறுதல் ;

(ஆ) வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல் மற்றும் மூடிவிடுதல் ;

(இ) பணங்களை பிணையுடன் அல்லது பிணையின்றி கடனெடுத்தல் அல்லது திரட்டுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவைப்படும் ஆளணியினரை ஈடுபடுத்துதல், தொழிலிலமர்த்துதல் மற்றும் வேலை நீக்குதல் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களின் மேம்படுத்தல் அல்லது முன்னேற்றுதலுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் புரிதலும் நிறைவேற்றுதலும்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கும் அமைய (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தை முகாமை செய்தல்.

(2) சபையானது, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க பொது உறுப்பினர்களால் ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், இரண்டு உபதலைவர்கள், பொருளாளர், உதவிப் பொருளாளர், செயலாளர், உதவிச் செயலாளர் மற்றும் வேறு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டமைந்ததாதல் வேண்டும்.

(3) இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் சபை, கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையாதல் வேண்டும்.

**6**. (1) உறுப்பினர்களின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்குமாக அல்லது எவற்றுக்குமாகவும், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :- கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) சபையின் கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறை மற்றும் அத்தகைய கூட்டங்களுக்கான கூட்ட நடப்பெண் ;

(ஆ) சபையின் உறுப்பினர்களினதும் தேர்தல், நியமனம் மற்றும் நீக்குதல் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் அனுமதி, விட்டு விலகுதல் அல்லது நீக்கப்படுதல் ;

(ஈ) சபையின் கடமைகளும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பட்ட அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் கடமைகளும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபன நிதியத்தின் நிருவாகமும் முகாமைத்துவமும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட எவ்விதியும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்ற அதே கூட்டத்தில் அதே முறையில் வேறுபடுத்தப்படலாம், அதற்குச் சேர்க்கப்படலாம் திருத்தப்படலாம் அல்லது இல்லாதாக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வோர் உறுப்பினரும், கூட்டுத்தாபன விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது பின்வருவனவற்றைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு உடன்நேர்முந்திய நாளன்று மன்றத்தின் வரவிலுள்ள எல்லாப் பணங்களும் ; அத்துடன்

(ஆ) கொடை, மரணசாசனக்கொடை, நன்கொடை, உதவு தொகை மற்றும் மானியக்கொடை என்ற வழியாக கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட எல்லாப் பணங்களும்.

(2) நிதியத்தின் வரவிலுள்ள எல்லாப் பணங்களும் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதிலும் அதன் குறிக்கோள்களை முன்னேற்றுவதிலும் உறப்பட்ட செலவினங்களைக் கொடுத்துத் தீர்க்க பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

**8**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்துக்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புகளும் கூட்டுத் தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தேதியன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள செலுத்தப்படற் பாலதான நன்கொடைகள், உதவுதொகைகள் உட்பட தனிசுகள் எல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக் குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தினால் செல்மதியாக வுள்ளனவும் அதற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.*

**9**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை அல்லது இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்ற வகையில் அல்லது வேறுவகையாக கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாகவரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டத்தில் ஆற்றலுடையதாதலும், இயலுமானதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாப னத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். கூட்டுத்தாபனம் அதன் ஆதனங்களை விற்க, ஈடுவைக்க, குத்தகைக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையாக கையுதிர்க்க முழுத்தத்துவமுடையதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருக்கலாம்.*

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும்.

*கணக்காய்வுகளும் கணக்குகளும்.*

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செல வினம், சொத்துக்களும் பொறுப்புகளும் அத்துடன் கூட்டுத்தாப னத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி முறை யான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையால் அந்நோக்கத் திற்கென நியமிக்கப்படும் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாள ரினால் ஆண்டுக்கொரு தடவை கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பின

ரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கலைத்தலின் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புகளையும் திருப்தி செய்ததன் பின்னர் எத்தன்மைத்தான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின் அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. அத்தகைய ஆதனங்கள், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு எந்தக் கழகம் அல்லது கழகங்கள் அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை பகிர்ந்தளிப்பதிலிருந்து அவற்றின் விதிகளினால் தடை செய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படலாம் அல்லது கைமாற்றப்படலாம். அத்தகைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபன கலைப்பின்போது அல்லது கலைப்புக்கு உடன்முன்னதாக கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, சபையின் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி எச்சாதனத்திலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் சமூகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியற் குழுவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலாகாது அல்லது பாதிப்பதாதலாகாது.

*குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்